அந்த டிரைவர்கள் பொறுப்பாக செயல்படும் வகையில் ஒவ்வொரு டிரைவருக்கும் ஒரு பஸ் ஒப்படைப்பதன் மூலம் நல்லபடி அந்த நிர்வாகத்தை நடத்தலாம் என்பதை அரசு தெரிந்து கொண்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தை ஒட்டித்தான் இரண்டு டிரைவர்களிடத்தில் ஒரு பஸ் ஒப்படைப்பது என்று அரசாங்கம் ஒரு திட்டத்தை பரிசீலித்துக்கொண்டு இருக்கிறது. அதிலே ஒவ்வொரு ரூட்டுக்கும் ஒரு பஸ் இருக்கிறது. ஆகவே வேறு ரூட்டில் டிரைவர்கள் மாற்றம் செய்யும்பொழுது அந்த பஸ்களை வேறு ஒருவரிடத்தில் ஒப்படைக்கப்படுகிறது. வண்டிகள் பழுதடைந்து விடும் போதும் டிரைவர்களை வேறு இடத்திற்கு மாற்றவேண்டியிருக்கிறது. ஆனால் முதல் கட்டமாக சென்னை மாநகரத்திலும், கன்னியாகுமரி மாவட்டத்திலும் கிட்டத்தட்ட அரசு பஸ்களே அதிமாக ஓடுவதால், அங்கே இருக்கும் டிரைவர்களுக்கு அவர்களுடைய சர்விஸ் வரைக்கும், அவர்களுக்கே அந்த பஸ்ஸை ஒப்படைக்கும் திட்டத்தை அமுல் நடத்த அரசு பரிசீலனை செய்து வருகிறது.

திரு. நா. வீராசாமி: பேரவைத் தலைவரவர்களே, டிரைவர்களிடத்தில் பஸ்ஸை ஒப்படைக்கும் செயற்குறிப்பு இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பஸ்ஸை ஒப்படைத்தால் மட்டும் போதாது. அந்த பஸ்ஸுக்கு வேண்டிய ஸ்டெப்னி, ஸ்பேனர்கள் முதலியவைகள் ஒப்படைத்தால்தான் நீண்ட தூரம் செல்லும் பஸ்களில் பழுது அடைந்து விட்டால் பழுது பார்க்க முடியும். இப்படிப்பட்ட கருவிகள் ஒப்படைப்பது பற்றி அரசின் செயற்குறிப்பில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நீண்ட தூரப் பேருந்துகளுக்கு இப்படிப்பட்ட கருவிகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. 10 பஸ்ஸுக்கு ஒரு மெயின்டனன்ஸ் குரூப் என்று போட்டு, 10 பஸ்ஸுக்கான 20 டிரைவர்கள் என்ற வகையில் ஒரு குழு அமைப்பது என்று அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது.

கோயில் அறங்காவலர் நியமனத்தில் உச்சவரம்பு

*492. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கோயில்களுக்கு அறங்காவலர் நியமிப்பதில் உச்சவரம்பு நிர்ணயிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தமிழ்நாடு 1959-ம் ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்டத்தின் 47-வது பிரிவின் கீழ் பட்டியல் படுத்தப்பட்ட நிறுவனங்கள் தொடர்பாக மூன்று பேர்களுக்கு குறையாமலும் ஐந்து பேர்களுக்கு மேற்படாமலும் அறங்காவலர் குழு ஒன்றை அமைக்க ஆணையாளர் தகுதிபடைத்த அதிகாரியாவார். 49-வது பிரிவின்கீழ் பட்டியல் படுத்தப்படாத நிறுவனங்கள் தொடர்பாக உதவி ஆணையாளர் மேற்கூறியவாறு அறங்காவலர் குழுவை அமைக்கலாம். அவர் ஒரேவொரு அறங்காவலரையும் நியமிக்கலாம். ஐந்து அறங்காவலர்கள் என்றும் வரையறை நியமன அறங்காவலருக்குப் பொருந்தும். இப்போதுள்ள விதித்துறையில் மாறுதல் ஏதும் செய்யக் கருதப்படவில்லை.

1971 ஜூலை 27]

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, ஒரு சிலர் 7-8 கோவில்களுக்குக் கூட டிரஸ்டிகளாக நியமிக்கப்படுகிறார்கள். அதைப் பரவலாக்கி பலருக்கும் வாய்ப்பளிக்கும் வகையில் அடுத்த டிரஸ்டி இப்போது வேண்டாம், இரண்டுக்கு பிறகு எப்போதும் வேண்டாம் என்று அரசு முடிவு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : குடும்ப நலத்திட்டத்திற்கு எப்படி அந்தக் குடும்பத்தைச் சார்ந்தவர்களே முடிவு எடுக்கவேண்டுமோ அது போல் அறங்காவலர்களாக நியமிக்கப்படுபவர்களும் போதும் என்று சொல்ல வேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, இப்படி ஆலயங்களுக்கு அறங்காவலர்கள் நியமிக்கும்போது பெண்களுக்குச் சலுகையளிக்கப்படுமா? காரணம் பெண்கள் ஆண்களைக் காட்டிலும் தெய்வ பக்தி அதிகம் உள்ளவர்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அம்மன் கோவில்களுக்கு டிரஸ்டிகள் நியமிக்கப்படும்போது இது கருத்தில் கொள்ளப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அம்மன் கோவில் என்ன, ஈஸ்வரன் கோவிலைப் பராமரிப்பதற்குக் கூட சக்தி, 'சக்திகளுக்கு' உண்டு என்பது தெரியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 'சக்தி' ஈஸ்வரர்களையே ஆட்டிப் படைப்பவர்கள் என்பது எங்களுக்குத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறியிடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

---

(2) கவன ஈர்ப்பு

கீழ்ப்பாக்கம் மருத்துவமனை செவிலியர் தவறாக மனநோய் மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டதும், மருத்துவமனைப் பணியாளரிடையே ஏற்பட்டுள்ள அமைதியின்மையும்.

THIRU K. T. K. THANGAMANI : Sir, under Rule 41 of the Assembly Rules, I call the attention of the Hon. Minister for Public Health to a matter of urgent public importance, namely, the action of the Kilpauk Hospital authorities in sending wrongfully one of the Nurses to the Mental Hospital and the consequent unrest among the Hospital employees.

*** மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** பேரவைத் தலைவரவர்களே, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைச் செவிலியர் பணியாளர்களில் ஒருவராகிய செல்வி ஏ. வசந்தா ரத்தினபாய் என்பவரை அம்மருத்துவ மனையைச்சேர்ந்த ஆண் ஊழியர்கள் கை கால்களைக் கட்டி வன்முறையில் ஆம்புலன்ஸ் வண்டிக்குள் தள்ளி சென்னை மனநோய் மருத்துவமனைக்கு அனுப்பியதாக செவிலியர்கள் கேள்விபட்டதால் அவர்கள் கலக்கமடைந்தனர் என்று, உறைவிட உதவி மருத்துவ அதிகாரியால் சென்னை, அரசினர் கீழ்ப்